# புதிய உடன்படிக்கை
## பாகம் 4

**வார்த்தைப்படிப்பு: உடன்படிக்கை.**

**Covenant: உடன்படிக்கை:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள் அல்லது குழுக்கள் தங்களுக்குள் செய்து கொள்ளும் ஒப்பந்தம்.

**Testament: ஏற்பாடு: உயில், மரண சாசனம்.** ஒருவரது எழுதப்பட்ட கடைசி விருப்பம்.
பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கை என்பதற்காக **'பெரித்'** என்ற எபிரேய வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில், **Covenant, Testament** ஆகியவற்றுக்கான கிரேக்க வார்த்தை **"டையதிகெ".** இவ்வார்த்தை, தமிழ் வேதாகமத்தில் சுமார் 32 முறை **'உடன்படிக்கை"** என்றும், ***எபி 9:16,17*** ல் **'மரண சாசனம்'** என்றும், *2* ***கொரி 3:14***; ***கலா 4:24*** ல் 'ஏற்பாடு' என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

வேதாகமம் உண்மையில் **" ஒரு உடன்படிக்கை ".** தேவனால் மனிதனோடு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை. இது இரண்டு பகுதிகளை கொண்டது **1. பழைய உடன்படிக்கை ( பழைய ஏற்பாடு ). 2. புதிய உடன்படிக்கை ( புதிய ஏற்பாடு ).** பழைய உடன்படிக்கைக்குள் புதிய உடன்படிக்கை மறைந்திருக்கிறது. பழைய உடன்படிக்கைக்குள், புதிய உடன்படிக்கையின் மாதிரிகளும் நிழல்களும் நிறைந்திருக்கிறது.

தேவன் நல்லவர், அவர் அன்பானவர் *( 1 யோவான் 4:8 ),* அவர் ஒரு போதும் மாறாதவர். மனிதர்கள் தங்களது அனுபவத்தாலும் அறியாமையினாலும் தேவனைப்பற்றி பல காரியங்களை சொல்வார்கள். அவர்கள் அன்பில்லாய்மையினால், அறியாமையினால் சொல்கிறார்கள் *( 1 யோவான் 4:8 ).* **அன்புள்ளவர்களுக்குத்தான் நம் தேவன் அன்பானவர் என்ற உண்மை புரியும்.** தேவனுடைய உடன்படிக்கை அவரது சுபாவத்தை சரியாக வெளிப்படுத்துகிறது.

*ஏசா 54:8 அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்.*

*9 இது எனக்கு நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம்போலிருக்கும்; நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின்மேல் புரண்டு வருவதில்லை என்று நான் ஆணையிட்டதுபோல, உன்மேல் நான் கோபங்கொள்வதில்லையென்றும், உன்னை நான் கடிந்துகொள்வதில்லையென்றும் ஆணையிட்டேன்.*

*10 மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.*

*உன்மேல் நான் கோபங்கொள்வதில்லையென்றும், உன்னை நான் கடிந்துகொள்வதில்லையென்றும் ஆணையிட்டேன். என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும்.*

Bro D.Vergin kumar,

To continue..